வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.06.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 178 பக்கங்கள் : 12

### சர்வதேச நியமங்களுக்கு அமைய

# உள்நாட்டு பொறிமுறையை இலங்கை நிறுவ வேண்டும்!

## ஐ. நா. மனித உரிமைகள் ஆணையர் வலியுறுத்து




கொழும்பு, ஜூன் 27

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறலை நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டு பொறிமுறையை நிறுவவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அழைப்பு விடுத்துள்ளார்.**

அத்துடன், நிறுவப்படும் உள்நாட்டு பொறிமுறையானது சர்வதேச விதிமுறைகளுடன் ஒத்துப் போக வேண்டும் என்றும் அத்தகைய பொறிமுறையை நிறுவுவதில் இலங்கை சர்வதேச ஆதரவை பெற வேண்டும் எனவும் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது பயணத்தை நிறைவு செய்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்றைய தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்றார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த சந்திப்பில் அவர், "உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் அரச தரப்பினருடன் விவாதித்தேன். பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக 11



## நயினை அம்மனுக்கு நேற்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பங்கேற்ற பல ஆயிரம் பக்தர்கள் 'அரோகரா' கோஷம் முழங்க நண்பகல் 12 மணிக்கு கொடியேறியது.

முன்னதாக, அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வசந்த மண்டபத்தில் 11

### செம்மணி மனித புதைகுழியில்

## குழந்தை உட்பட மேலும் 3 மனித எச்சங்கள் மீட்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 27

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமான இரண்டாம் கட்ட அகழ்வில் குழந்தை உட்பட மூன்று மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுக்கு நிதி விடுவிக்கப்பட்ட நிலையில் ஏற்கனவே 11

## கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் பலி!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 27

மீன்பிடிக்க முயன்ற 10 வயது சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தார்.

அச்சுவேலி - தோப்புப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் 11

## யாழ். - கொழும்பு கடுகதி ரயில் ஜூலை 7 முதல் தினசரி சேவை!

யாழ்ப்பாணம், ஜூன் 27

இதுவரை காலமும் வார இறுதி நாட்களில் சேவையில் ஈடுபட்டு வரும் குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி ரயில் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி முதல் தினசரி சேவையாக கல்கிசையிலிருந்து (கொழும்பு) காங்கேசன்துறை (யாழ்ப்பாணம்) வரை முன்னெடுக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலைய அத்தியட்சகர் ரீ. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொதுமக்கள் புகையிரத திணைக்களம், துறைசார் தரப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. இதுவரை காலமும் சனி, ஞாயிறு தினங்களிலேயே கடுகதி ரயில் சேவை இயக்கப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 11

## நீரில் மூழ்கி இளைஞர் பலி!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 27

தொட்டியில் நீந்திக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் வலிப்பு ஏற்பட்டதில் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இணுவில் மேற்கை சேர்ந்த சசிக்குமார் ஜீவன்சன் (வயது 20) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞருக்கு தெல்லிப்பழை பகுதியிலும் வீடு ஒன்றுள்ளது. இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் தந்தையின் 11



## நல்லிணக்க முயற்சிகளுக்கு முழு ஆதரவு வழங்க தயார்!

### ஜனாதிபதியிடம் வோல்கர் டர்க் உறுதி

- பொருளாதா உறுதிநிலையை ஏற்படுத்துவதே பிரதான இலக்கு - ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 27

தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துதல், நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், மனித உரிமைகளை பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா தலைமையிலான அரசாங்கம் பின்பற்றி வரும் திசைக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று 11

## கடலுக்கு சென்ற மீனவர் மாயம்!

வடமராட்சி, ஜூன் 27

கட்டுமரத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

வடமராட்சி கிழக்கு - மணல்காடு பகுதியை சேர்ந்த 38 வயதான இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்று அதிகாலை கடலுக்கு சென்ற அவர் நேற்றிரவு வரை கரை திரும்பவில்லை. வழக்கமாக காலை 9 மணிக்கு அவர் கரைக்கு திரும்புவது வழக்கம் என்று காணாமல் போன மீனவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இதேநேரம், காணாமல்போன வரை தேடிச் 11

## கரைதுறைப்பற்று சபை தமிழ் அரசு கட்சி வசம்!

முல்லைத்தீவு, ஜூன் 27

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக இலங்கை தமிழ் அரசு கட்சியின் சி. லோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார பதவிகளுக்கான தேர்தல் நேற்று வியாழக்கிழமை வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் 11

## 40 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 27

கீரி சம்பாவுக்கு நிலவும் தட்டுப்பாட்டை அடுத்து அதற்கு மாற்றீடாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு உணவு கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு அனுமதியளித்துள்ளது.

இதன்படி, 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை அரச நிறுவனங்கள் மூலமாகவும் ஏனையவற்றை தனியார் துறை மூலமாகவும் இறக்குமதி செய்ய 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவில் கொட்டப்பட்ட கழிவுகள் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 27

காக்கைதீவில் கொட்டப்படும் மல, மருத்துவ கழிவுகளை அகற்றும் பணி முன்னெடுக்கப்படுகிறது.

காக்கைதீவு பிரதேசத்தில் மலக்கழிவுகள், மருத்துவ கழிவுகள் என்பன மிக நீண்ட நாட்களாக கொட்டப்படுவது குறித்து பிரதேச வாசிகள், சமூக ஆர்வலர்களால் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இதையடுத்து அங்கு சென்ற அவர் இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து இந்தப் பிரச்னை உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து, கழிவுகளை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. (ஐ)



## வடமராட்சி கிழக்கில் வர்த்தக சந்தை!

வடமராட்சி, ஜூன் 27

வடமராட்சி கிழக்கு போக்கறுப்பில் வடக்கு மாகாண தொழில்துறை திணைக்களம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் நிதி பங்களிப்பில் வர்த்தக சந்தை நேற்று நடைபெற்றது.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றல், வரவேற்பு நடனத்துடன் வர்த்தக சந்தை ஆரம்பமானது.

சந்தையில் வடமராட்சி கிழக்கு உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தமது கைவினை பொருட்கள், உலர் உணவுகள், மரக்கறி வகைகள், ஆடைகள் என்பவற்றை காட்சிப்படுத்தி தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி, சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-05)

## இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் நீரிழிவு கழகமும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் திருநெல்வேலி சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை நடைபெறும் இந்த பரிசோதனை முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவு சுட்டி, மருத்துவ ஆலோசனைகள் என்பன நடைபெறவுள்ளன. (ஐ)

## பன்றி நெல்லை கட்டுப்படுத்தல் தொடர்பாக விழிப்புணர்வு!

முல்லைத்தீவு, ஜூன் 27

புதுக்குடியிருப்பு வயல்களில் வளரும் பன்றி நெல்லை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு செயல்பாடு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

புதுக்குடியிருப்பு - கைவேலியில் பன்றி நெல்லால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கட்டுப்படுத்தும் நோக்கில், விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

மந்துவில், கோம்பாவில் விவசாய போதனாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் கைவேலி வயல் பகுதியில் இந்த விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பன்றி நெல்லை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன், பன்றி நெல்லின் தாக்கம், அதனைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமம் தொடர்பாக விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் முல்லைத்தீவு பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை பாட விதான உத்தியோகத்தர் எஸ். நிரஞ்சன்குமார், மந்துவில் விவசாய போதனாசிரியர் எஸ். பிரசாந்தன், கோம்பாவில் விவசாய போதனாசிரியர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# நயினை அம்மன் ஆலய திருவிழா ஏற்பாடு தொடர்பிலான அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகம் விசேட அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதன்படி, குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து படகு சேவையானது எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி வரை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபடும்.

இதேபோன்று, இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்தானது யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்திலிருந்து அதிகாலை 5.30 மணி தொடக்கம் இறுதி படகுச் சேவைக்கமைய சேவையில் ஈடுபடுவதுடன், அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையிலும் சேவையில் ஈடுபடும். விசேட திருவிழா காலங்களில் பேருந்தானது அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாண பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும். அத்துடன், இரவு பேருந்து சேவையானது படகுச் சேவைக்கு அமைய சேவையில் ஈடுபடும்.

குறிகாட்டுவான் இறங்குதுறை பகுதியிலும் அதற்கு முன்னான வீதியோரங்களிலும் வாகனங்கள் தரிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. வாகனங்கள் அடியார்கள், பொதுமக்களை இறக்கிவிட்டு வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்தில் தரிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையை கடைப்பிடிக்காதவர்கள்மீது பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடந்த 24ஆம் திகதி தொடக்கம் ஜூலை 12ஆம் திகதி வரை குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கான கட்டட பொருட்கள் வங்களாவடி இறங்குதுறைக்கு கொண்டு செல்லப்படலாம். குறிகாட்டுவானிலிருந்து பி.ப 2.00 மணிக்குப் பின்னர் கட்டடப் பொருட்களை ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்படுவதுடன் இறுதி 04 திருவிழா காலங்களில் கட்டடப் பொருட்கள் எடுத்துச்செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.


அடியார்களுக்கான மதிய, இரவு உணவானது அமுதசுரபி அன்னதான சபையினரால் திருவிழா நாட்களில் வழங்கப்படும்.

பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுவார்கள். மேலும் பொதுமக்கள், அடியார்கள் தங்களது பெறுமதிமிக்க பொருட்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

ஆலய வளாகத்தில் தண்ணீர்ப்பந்தல் அமைக்க விரும்பும் அடியார்கள் மற்றும் பொதுநலன்விரும்பிகள் பொது சுகாதார பரிசோதகரை தொடர்புகொண்டு அனுமதியை பெற்றுக்கொள்ளவும்.

திருவிழா காலங்களில் ஆலய வளாகத்தில் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையினை முற்றாக தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. ஆலயத்துக்கு முன்புறமாக உள்ள தற்காலிக கடைகள் அகற்றப்பட்டு பொருத்தமான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ-05)

## போதைக்கு எதிராக நேற்று சங்கானையில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 27

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை சங்கானை பேருந்து நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "போதை அற்ற வாழ்வே ஆரோக்கியத்திற்கான வழி, எம் சமூகத்தை அழிக்கும் மது எமக்குத் தேவை தானா?, அரசே புதிய மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்காதே, மது ஒழிப்பில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு கை கொடுப்போம், போதையெனும் சாக்கடையில் விழாதீர்கள்" எனும் வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய படி கோஷமிட்டனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்!

கிளிநொச்சி, ஜூன் 27

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் த. ஜெயசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸ், கடற்படை அதிகாரி மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## 790 வழித்தட பேருந்து சேவை சீரின்மையால் மக்கள் பாதிப்பு

### பாடசாலை மாணவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு அரியாலை வரை சேவையில் ஈடுபடும் 790 வழித்தட பேருந்து சீரான முறையில் சேவையில் ஈடுபடுவதில்லை என்று பூம்புகார், கிழக்கு அரியாலை, நாவலடி பிரதேச பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனால், மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீரான பேருந்து சேவை இன்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்றைய தினம் கோண்டாவில் சாலையில் முறைப்பாடு ஒன்றையும் அளித்துள்ளனர்.

790 வழித்தட பேருந்து சேவை சீரின்மையால் தாம் கற்கும் பாடசாலைக்கு உரிய நேரத்தில் செல்ல முடிவதில்லை என்றும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் எழுத்துமூலம் வழங்கிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர்களின் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட கோண்டாவில் சாலை முகாமையாளர் ந.குணசீலன், "பிரச்னைகளை இனங்கண்டு, அவற்றுக்கான தீர்வுகள் உடன் வழங்கப்படும் என்றும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சீரான பேருந்து சேவை வழங்கப்படும்", என்றும் உறுதியளித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.06.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஆணையாளர் பரபரப்பு ஓய்ந்தது - அடுத்தது?

ஐக்கிய நாடுகள் சபைக்கான மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் உடனான சந்திப்பும் மனுக்கள் கையளிப்பும் முடிந்துவிட்டன. பொதுவாக இவ்வாறான விடயங்கள் கோவில் சடங்குகள் போன்றுதான் நடந்து முடிவதுண்டு. ஆனால், ஆணையாளர் அவரின் பதிலாக எதைக் கூறிச் சென்றிருக்கிறார் என்பதைத்தான் மனுக்களில் கையெழுத்திட்டிருக்கும் அரசியல்வாதிகளும் சிவில் சமூகக் குழுக்கள் என்போரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு பிரபலமான கூற்றுண்டு. அதாவது, "நீங்கள் சில சந்தர்ப்பங்களில் பலரை ஏமாற்றலாம் - பல சந்தர்ப்பங்களில் சிலரை ஏமாற்றலாம். ஆனால், எல்லா காலத்திலும் எல்லோரையும் ஏமாற்ற முடியாது." ஆனால், பேரவையின் ஆணையாளர் விடயத்தில் அவரால் என்ன முடியும் முடியாது என்பதை அவரே வெளிப்படையாக கூறிச் சென்றிருக்கிறார்.

பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறுவது புரிகிறதா? தமிழ் மக்களுக்கு பிரச்னைகள் இருப்பதை நான் உணர்கிறேன். ஆனால், அந்த பிரச்னைகளுக்கான தீர்வை அரசாங்கத்தோடு இணைந்துதான் காண வேண்டியிருக்கிறது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களே ஆகியுள்ள நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்துவோம்."

தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ்த் தேசிய புத்திஜீவிகள் என்போருக்கு இதனை விடவும் தெளிவான பதிலை ஒருவர் எவ்வாறு கூற முடியும்? மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அவரின் எல்லையை புரிந்து கொண்டு கூறுகிறார். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் எல்லைக்கோடு என்ன? இன்றைய உலக அரசியலில் ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறான திரிசங்கு நிலையில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு சிந்திப்போருக்கு ஆணையாளரின் மேற்படி கருத்து ஆச்சரியமான ஒன்றல்ல மாறாக, எதிர்பார்த்த ஒன்றுதான்.

இது தொடர்பில் ஏற்கனவே எமது ஆசிரியர் தலையங்கத்தில் தெளிவாகப் பதிவு செய்திருந்தோம். ஆணையாளரிடம் பிரச்னைகளை கூறுங்கள். ஆனால், அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகள் வேண்டாம் - அவ்வாறு அதிகமான எதிர்பார்ப்புகளை கற்பனை செய்வீர்களானால் ஏமாற்றமே மிஞ்சும். எதிர்பார்ப்புகளை வளர்த்தவர்கள் இப்போது மூக்குடைபட்டு நிற்கின்றனர்.

இதற்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்களான நவநீதம்பிள்ளை, இளவரசர் ஜெய்த் அல் ஹுசைன் ஆகியோர் கூறியதை விடவும் தற்போதைய ஆணையாளர் மிகவும் வெளிப்படையாகவும் - தெளிவாகவும் மனித உரிமைகள் பேரவையின் எல்லை என்ன என்பதைத் வெளிப்படுத்தியிருக்கிறார்.

என்னதான் வெளித் தரப்புகளோடு உரையாடினாலும் பிரச்னைகளுக்கான தீர்வை கோரினாலும் அவர்கள் எவராலும் தீர்வை உடனடி உணவு போன்று தர முடியாது. இதனைப் புரிந்து கொண்டு தீர்வுக்கான குரலை பாதுகாக்கும் அதேவேளை, வாய்ப்பான பக்கங்கள் அனைத்தாலும் நடக்கவும் - கிடைக்கும் சந்தர்ப்பங்களை உச்சபட்சமாக பயன்படுத்துவதன் மூலம் மட்டும்தான் முன்னோக்கி பயணிக்க முடியும். ஆணையாளரின் கூற்று இதனை இன்னும் வலுவாக முன்வைத்திருக்கிறது. புரிந்து கொண்டும் புரிந்துகொள்ளாமல் நடிப்பவர்கள் தொடர்பில் எதனையும் நாம் குறிப்பிட முடியாது. இனி மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

# புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜுன் 27

தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் புத்தக அரங்க விழாவின் 25ஆவது நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் இந்த நிகழ்வில், இரண்டாவது நாளான நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில், பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், 'சமயமும் சமூக-பண்பாட்டு உருமாற்றமும் - காலனிய யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்றுச் சமூகவியல் மீள்நோக்கு' நூலின் வெளியீட்டு நிகழ்வு கலாநிதி த. கலாமணி நினைவு அரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அரங்க திறப்புரையை எழுத்தாளர் மு. அநாதரட்சகன், நூல் மதிப்பீட்டுரைகளை கவிஞர் ந. குகபரன், தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் ந. இரவீந்திரன், ஆய்வாளர் ச.சத்தியதேவன் ஏற்புரையை நூலாசிரியர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை. நித்தியானந்தனின் எழுத்துருவில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் 'முட்டை' மற்றும் 'என்னவென்று சொல்வேனடி?' ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன.

விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

(ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் போதைப்பொருள் ஒழிப்புதின நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜுன் 27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை ஒட்டிய சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதி பேச்சாளராக அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் குக் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மனநல மருத்துவ நிபுணர் அகிலன் சிவஞானம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வை விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி எம். எவ். முர்ஷிதா முன்னிலைப்படுத்தினார். உடற் கல்விநெறி ஆசிரிய மாணவி உஷாந்தினி விமல்ராஜ் போதையற்ற வாழ்வு என்ற தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையை ஆற்றினார்.

கிறிஸ்தவ பாடநெறி ஆசிரிய மாணவி சு. கமலினியின் தயாரிப்பில் போதைப் பாவனை விழிப்புணர்வு ஆவணப்படம் காட்சிப் படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அதிதிக்கான அறிமுக உரையை கலாசாலை அதிபர் வழங்கினார். பிரதி அதிபர் க.செந்தில்குமரன் நிறைவுரை ஆற்றினார். நிகழ்வில் முன்னைநாள் விரிவுரையாளர் வ.சி. குணசீலன் கலந்துகொண்டு சிறப்பித்தார். கலாசாலையின் முகாமைத்துவ குழுவினரால் அதிதி கௌரவிக்கப்பட்டார்.

(ஐ)

# எரிபொருள் வாகனம் தடம்புரண்டு விபத்து!

கிளிநொச்சி, ஜுன் 27

பூநகரி - குடமுருட்டி பாலம் அருகே வேகக்கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் தாங்கி வாகனம் நேற்று பின்னிரவு நேரம் தடம்புரண்டது.

முத்துராஜவலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பூநகரி வீதியால் பயணித்த எரிபொருள் தாங்கி வாகனமே இவ்வாறு தடம் புரண்டது.

இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பெருமளவான டீசல் வெளியேறி அந்தப் பகுதியில் தேங்கியது. அதனை பொது மக்கள் எடுத்துச் சென்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 27 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 13
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துதியை




**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரம் செழிக்கும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**தனுசு**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக் கட்டும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

# "கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டும்"

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு அனைவரும் எம்முடன் ஒன்றிணைந்து தீர்க்க காண வேண்டும் என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வரவேற்புரையாற்றுகையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வாழ்வாதாரத்தில் விவசாய மற்றும் மீன்பிடி பிரதானமானது. அந்த வகையில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளைக் கேட்டறிந்து பொருத்தமான இயலளவான தீர்வுகளை காண்பதற்காக இவ்வாறான கூட்டத்தை ஒழுங்கு செய்த அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழில் பிரதி அமைச்சர் கூறுகையில், அரசாங்கம் கொள்கை ரீதியான முடிவுகளை அமைச்சில் எடுத்தாலும் பிரதேச மட்டத்தில் உள்ளூர் அமைப்புக்களை ஒன்றிணைத்து தீர்வுகளை காண வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடற்றொழில் சார்ந்த குடும்பங்கள் மாவட்ட சனத்தொகையில் அண்ணளவாக 38 சதவீதமாகும். அதனால், விசேடமாக கவனிக்கப்பட வேண்டிய மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. மேலும், ஜனாதிபதி அநுரகுமார, கடற்றொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். குறுகிய காலத்தில் தீர்க்க வேண்டிய கடற்றொழிலாளர்க ளின்பிரச்னைகளை விரைவில் தீர்க்குமாறு அறிவுறுத்தியுள்ளார். எமது அரசாங்கம் வறுமை ஒழிப்பு, டிஜிற்றல் முறைமை மற்றும் கிளீன் சிறீலங்கா போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தி வருகிறது. கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு அனைவரும் எம்முடன் ஒன்றிணைந்து தீர்க்க காண வேண்டும்- என்றார். (எ)

# வவுனியாவில் மாணவர் பாராளுமன்ற அமர்வு

வவுனியா, ஜூன் 27

வவுனியா தெற்கு வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு சிறப்பான முறையில் பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள் தெரிவுடன் நடைபெற்றது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் சமூக விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சத்தியமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் இந்த அமர்வு நடைபெற்றது.



வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டதுடன் சபாநாயகர், பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் செங்கோலுடன் பாராளுமன்ற சம்பிரதாய முறைப்படி அமர்வு நடைபெற்றது.

இதில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த. முகுந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அமல்ராஜ், தட்சாயினி, வீரசிங்கம், வலய கணக்காளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சுபா, வலய ஆசிரிய ஆலோசகர்கள், சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# வவுனியாவில் புகைத்தலுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புணர்வு நடைபவனி

வவுனியா, ஜூன் 27

வவுனியா தெற்கு சிங்கள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் வைத்திய அதிகாரி யூட் பீரிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நடைபவனி ஈரப்பெரியகுளம் மகா வித்தியாலயத்திலிருந்து ஏ - 9 பிரதான வீதி ஊடாக வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வரை நடைபெற்றது.



பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலுக்கு எதிரான மனநிலையை உருவாக்கும் நோக்கிலும் பாடசாலை சூழலில் புகைத்தலுடன் தொடர்புபட்ட பொருட்களின் விற்பனையை தடை செய்யும் முகமாகவும் குறித்த பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (எ-10)

# ஞானச்சுடர் 330 ஆவது மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஞானச்சுடர் ஆனி மாத 330 ஆவது மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில், வெளியீட்டுரையை ஆசிரியர் ச. வாகீசனும் மதிப்பீட்டுரையை ஆசிரியர் க. கைலைநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆயுதங்கள் நாட்டுக்கு வரவில்லை!

## அர்ச்சுனாவின் கருத்தை மறுக்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 27

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் அண்மையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் முட்டாளத்தனமான கருத்துக்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



கொழும்புத் துறைமுகத்தில் இருந்து அண்மையில் 323 கொள்கலன்கள் எந்தப் பரிசோதனைகளும் இல்லாமல் விடுவிக்கப்பட்டன. அதில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இருந்தன' என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அண்மையில் தெரிவித்திருந்தார். அர்ச்சுனாவின் கருத்துக்களையே, தவறானவை என்றும். முட்டாள்தனமானவை என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:- பைத்தியக்காரர் ஒருவர் வெளியிட்ட கருத்தாகவே அதனை நான் பார்க்கின்றேன்.

கொள்கலன்களில் என்ன இருந்தது என்பது எமக்குத் தெரியாது. அவை சோதனையின்றி விடுவிக்கப்பட்டதையும் அனுமதிக்க முடியாது. அவற்றில் புலிகளின் ஆயுதங்கள் இருந்தன என்று கனவு காணவும் முடியாது. எதுவும் அறியாமல் தன்னை வீரனாக காண்பித்துக் கொள்வதற்காக அவ்வப்போது அர்ச்சுனா அறிவிப்புகளை வெளியிடுகின்றார். இப்படியான மனநிலையில் இருக்கும் ஒருவரின் கருத்து தொடர் பில் அவ்வளவு முக்கி யத்துவம் வழங்க வேண்டிய தில்லை- என்றார்.

# கொத்து ரொட்டியும் வட்டிலப்பமும் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில்!

கொழும்பு, ஜூன் 27

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின், 2025 ஜூன் புதுப்பிப்பில், இலங்கையில் பயன்படுத்தப்படும் பல தனித்துவமான சொற்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இது, இலங்கையின் மொழி, கலாசார தனித்துவங்களை உலக அரங்குக்குக் கொண்டு செல்லும் ஒரு அடையாளமாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் நெல் அறுவடைக்காக நிலத்தைத் தயார் செய்வதைக் குறிக்கும் சிங்கள சொல்லான அஸ்வெத்தும என்னும் சொல்'Asweddu mize' என்று ஒக்ஸ்போர்ட் அகராதியில் சேர்க்கப்பட்டுள் ளது.

இதனைத் தவிர வெட்டப்பட்ட ரொட்டி, இறைச்சி, காய்கறிகள், மசாலா கலந்து செய்யப்படும் சாலையோர உணவான கொத்து ரொட்டி என்ற சொல்லும் ஒக்ஸ்போர்ட் அகராதியில் இடம்பிடித்துள்ளது.

மெல்லுங் என்ற தேங்காயும் மசாலாவும் கலந்து சுருட்டிச் செய்யப்பட்ட கீரை உணவு அல்லது கீரை சுண்டலும், கிரிபத் எனப்படும் பாற்சோறும் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

அவ்ருது என்ற சிங்கள சொல்லும், இஸ்லாமியர்களின் முக்கிய உணவாகக் கருதப்படும் வட்டலப்பம், என்ற சொல்லும் சிங்கள துல்லிசையான பைலா என்ற சொல்லும் ஒக்ஸ்போர்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

பப்பரே என்ற கிரிக்கெட் விளையாட்டுகளில் பரவலாக இசைக்கப்படும் பேன்ட் இசையைக்குறிக்கும் சொல்லும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வலவ்வ என்ற இலங்கையில் நில அளவையுடன் கூடிய பிரமாண்டமான வீட்டைக் குறிக்கும் சொல்லும், ஒசரி என்ற சிங்கள பெண்கள் அணியும், தனித்துவமான மடிப்பு வடிவத்தைக் கொண்ட பாரம் பரிய புடைவை என்ற சொல்லும் ஒக்ஸ்போர்ட் பிந்திய சேர்க்கையில் இடம்பிடித்துள்ளன.

(அ)

# குடும்ப வன்முறையால் 91 வீத பெண்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 27

நாடு முழுவதும் அதிகரித்துவரும் குடும்ப வன்முறை சம்பவங்கள் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையானது குடும்ப நல்வாழ்வு மற்றும் மன ஆரோக்கியத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு மாத்திரம் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட 12,198 குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டதாக அரச தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் உதவி கோருபவர்களில் 91 வீதமானவர்கள் பெண்கள் எனவும், 9 வீதமானவர்கள் மட்டுமே ஆண்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வைத்தியசாலைகளுக்கு மருந்து விநியோகத்தில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்க்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 27

வைத்தியசாலைகளுக்கான மருந்து விநியோகத்தின் போது ஏற்படக் கூடிய தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்காக சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கமையவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகிப்பதற்கு 3 வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. விசேட வைத்திய நிபுணர்களால் அவர்களது நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளின் பட்டியல் தயாரிக்கப்படும்.

அந்த மருந்துப் பட்டியலுக்கமைய சுகாதார அமைச்சினால் இதுவரை மருந்து விநியோகப் பிரிவின் ஊடாக வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவேண்டிய 862 மருந்து வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுடன் 12,444 சத்திர சிகிச்சை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், அதற்கான ஆலோசனைகள் விசேட வைத்திய நிபுணர்களிடமிருந்தே பெறப்படுகின்றன-என்றார்.

(அ)

# பகிடிவதை, துன்புறுத்தல்களை தடுப்பதற்கு விசேட செயலணி

கொழும்பு, ஜூன் 27

பகிடிவதை உள்ளிட்ட அனைத்து வகையான துன்புறுத்தல்களையும் தடுப்பதற்காக செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவவினால் 16 பேர் கொண்ட இந்த செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர், கலாநிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோசனைக்கமைய இந்த செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் நடைபெறும் பகிடிவதைகளை இதன்மூலம் ஒழிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களால், நிறுவன முகாமைத்துவத்தினால் அல்லது வேறுதரப்பினரின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான துன்புறுத்தல்கள் மற்றும் அந்த தரப்பினரால் பேராசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் ஆகியவற்றையும் தடுப்பது இந்த செயலணியின் நோக்கமாகும்.

விரைவில் இந்த செயலணியின் கீழ் பல்கலைக்கழக மட்டத்திலும் ஏனைய உயர்கல்வி நிறுவன மட்டத்திலும் பிரிவுகளை நிறுவுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# இலங்கை இராணுவத்துக்கு புதிய தலைமைத் தளபதி

கொழும்பு, ஜூன் 27

இராணுவத்தின் 67ஆவது தலைமைத் தளபதியாக இலங்கை பொறியியலாளர் படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கபில டோலேஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

26 ஆம் திகதி முதல் அமுக்கும் வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் வரை இராணுவத்தின் 66ஆவது தலைமைத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கேவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

காலாட்படை படைப்பிரிவின் கேர்ணல் மேஜர் ஜெனரல் மனாடா யஹம்பத், இராணுவத்தின் 47ஆவது பிரதி தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனமும் 26 ஆம் திகதி முதல் அமுக்கும் வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் முதல் இராணுவத்தின் 46ஆவது பிரதி தலைமைத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் லங்கா அமரபாலவிற்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# அர்ஜூன மகேந்திரனுக்கு அரசு மீண்டும் வலை வீச்சு

கொழும்பு, ஜூன் 27

"மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரனை இலங்கைக்கு கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவரு கின்றது."-என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வொன்றின்போது எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இது தொடர்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர் சிங்கப்பூர் பிரஜையென்பதால் சட்டரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சிற்சில தடங்கல்கள் உள்ளன. எனினும், இது பற்றி நாம் மீண்டும் அவதானம் செலுத்தியுள்ளோம். அவரை நாட்டுக்கு கொண்டுவருவதற்குள்ள இயலுமை தொடர்பில் கருத்துகள் பெறப்பட்டுவருகின்றது. விசாரணைகளும் இடம்பெறுகின்றன. இராஜதந்திர மட்டத்தில் தற்போது முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. நாம் முயற்சியை இன்னும் கைவிடவில்லை. தேவையான சட்டங்கள் இயற் றப்பட்டுவருகின்றன. புதிய சட் டங்கள்மூலம், விசாரணை களை புதிய கட்டத்துக்கு கொண்டுவர முடியும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைக்குரிய ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் முன்னாள் அமைச்சரின் மனைவி விடுதலை!

## நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்

கொழும்பு, ஜூன் 27

**முன்னாள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவி மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோவின் விடுதலையும், சர்ச்சைக்குரிய ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

பதவி நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் துசார உபுல்தெனியவின் வழக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, 2 பெண்களைக் கடத்தி கொலை செய்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஜனாதிபதி மன்னிப்பைப் பெற்ற பின்னர், 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டார்.

இது சர்வதேச மகளிர் தினத்துடன் தொடர்புடைய மன்னிப்பாக அறிவிக்கப்பட்டதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் மன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

# இலஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 22 வருடச் சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூன் 27

தம்புத்தேகம மகாவலி வலயத்தில் காணியொன்றில் உள்ள மரத்தை வெட்டுவதற்கு அனு மதி வழங்குவதற்காக 100,000 இலஞ்சம் கேட்டு பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் முன் னாள் காணி அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன் றம் 22 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸங்க மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

மேலும், பிரதிவாதிக்கு 30,000 ரூபா அபராதம் விதித்த நீதிபதி, இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் இலஞ்சத் தொகையை அபராதமாக வசூலிக்கவும் உத்தரவிட்டார்.

அபராதம் செலுத்தாவிட்டால் மேலதிகமாக ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ள மனுதாரருக்கு ஒரு இலட்சம் ரூபா இழப் பீடு வழங்குமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அநுராதபுரம் பகுதியில் வசிக்கும் 67 வயதான முன்னாள் காணி அதிகாரி ஒருவருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

மகாவலி பிராந்தியத்தில் உள்ள நிலங்களிலிருந்து மரங்களை வாங்கி, அவற்றை வெட்டி மொரட்டுவ பகுதிக்கு கொண்டு செல்லும் தொழிலை மனுதாரர் நடத்தி வருவதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்த மரங்களை வெட்டுவதற்கு பிரதேச காரியாலயத்தில் மனுதாரர் அனுமதி கோரியிருந்தார், மேலும் பிரதிவாதி அனுமதி வழங்குவதற்கு மேற்படி இலஞ்சத் தொகையை கோரியிருந்தார்.

பின்னர், 2016 மார்ச் 14ஆம் திகதி குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்புடைய இலஞ்சத்தைப் பெற்றபோது, அவர் இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு தீர்ப்பை அறிவித்த உயர் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதிக்கு எதிராக அரச தரப்பு சுமத்திய குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி, பிரதிவாதிக்கு இந்த தண்டனைகள் விதிக்கப்படும் என்று நீதிபதி குறிப்பிட்டார்.

(அ)

# சிறை கண்காணிப்பாளர்கள் சிலருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 27

சிறைச்சாலைகளின் உயர் அதிகாரிகள் சிலர் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்படுவதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

இரண்டு சிறப்பு தர கண்காணிப்பாளர்கள், ஒரு கண்காணிப்பாளர், 8 உதவிக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 5 சிறைச்சாலை பதில் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு இவ்வாறு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 27

நேற்று முன் தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 295 ரூபாய் 85 சதம், விற்பனைப் பெறுமதி 304 ரூபாய் 22 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 404 ரூபாய் 08 சதம், விற்பனைப் பெறுமதி 418 ரூபா 25 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 344 ரூபாய் 26 சதம், விற்பனைப் பெறுமதி 357 ரூபாய் 29 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 365 ரூபாய் 19 சதம், விற்பனைப் பெறுமதி 381 ரூபாய் 86 சதம்.

(அ)

# இலங்கைக்கு 20 மில்லியன் டொலரை வழங்கும் சீனா!

கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் கல்வித்துறையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்காக, 20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு சீன அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சீனாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னணியில் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, தெரிவு செய்யப்பட்ட 500 பாடசாலைகளுக்கு, ஸ்மார்ட் வகுப்பறைக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்குவதற்கும், வலையமைப்பு செயல்பாட்டு முகாமைத்துவ பிரிவை நிறுவுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்களை முன்னெடுப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

(அ)

# கதிர்காமம் எசல பெரஹரவில் 1,050 பொலிஸார் கடமையில்!

கொழும்பு, ஜூன் 27

வரலாற்று சிறப்புமிக்க ருஹுணு மகா கதிர்காம தேவாயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் எசல பெரஹரவின் போது பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக மொத்தம் 1,050 பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷாந்த டி சொய்சாவின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஐந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் மூன்று பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் இதற்காகப் பணியமர்த்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பானம பொலிஸ் பிரிவிலிருந்து யால சரணாலயம் வழியாக பெரஹர நிகழ்வுக்கு கால்நடையாக வரும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக முப்படை அதிகாரிகளின் உதவியைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ருஹூணு மகா கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹர நிகழ்வு இன்று முதல் ஜூலை 10 வரை நடைபெறும்.

(அ)

# சுற்றுலா பயணிகளிடமிருந்து மலேரியா தொற்று பரவலாம்!

கொழும்பு, ஜூன் 27

வெளிநாடுகளுக்குச் சென்று மீள நாடு திரும்புவோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மூலம் மீள மலேரியா தொற்று நாட்டினுள் பரவ வாய்ப்புள்ளதுடன் அவ்வாறு இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டிற்கு நோய்த் தொற்றுடன் வருகைதந்த சுமார் 15 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்தின் விசேட வைத்திய நிபுணர் இந்தீவரி குணரத்ன குறிப்பிட்டார்.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட வைத்தியர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

மலேரியா இலங்கையில் இருந்து முழுமையாக ஒழிக்கப்பட்ட நுளம்புகள் மூலம் பரவும் ஒரு தொற்று நோயாகும். எனினும் வருடாந்தம் பல மலேரியா நோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகைதந்தவர்களே இவ்வாறு நோய்த்தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன, நாட்டில் நோய் முழுமையாக ஒழிக்கப்பட்டிருப்பினும் நோய்க்காவியான நுளம்புகள் பரவியுள்ளமையால் நோயாளர்களிடம் இருந்து ஏனையோருக்கு நோய் பரவவாய்ப்புள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்று மீள நாடு திரும்புவோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மூலம் மீள மலேரியா தொற்று பரவலாம்.

இந்திய மற்றும் ஆபிரிக்கா போன்ற மலேரியா தொற்று பரவியுள்ள நாடுக ளுக்குச் செல்பவர்களுக்கு மலேரியா தொற்று தொடர் பில் அவதானத்துடன் செயற் பட வேண்டும். அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களில் பலர் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வகைதந்தவர்களாவர். நாட்டில் வருடாந்தம் 50 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் கடந்த வருடம் மாத்திரம் 38 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் 99 வீதமானோர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்ற ஆண்கள் எனவும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 15 மலேரியா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் பதிவாகிய நோயாளர்களில் பலர் சட்டவிரோதமான முறையில் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்றவர்கள் என தெரியவந்துள்ளது. ஆகையால் வெளிநாடு செல்வோர் மலேரியா நோய்க்கான தடுப்பூசியை பெறுவது அவசியம் நாடளாவிய ரீதியில் உள்ள மலேரியா கட்டுப்பாட்டு நிலையங்களில் இவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என்றார். (அ)

# மேலும் இரு உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்தது ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஜூன் 27

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இரத்தினபுரியின் நிவித்திகலை பிரதேச சபையிலும் நுவரெலியாவின் அம்பகமுவ பிரதேச சபையிலும் ஆட்சி அமைத்துள்ளது.

இன்று நடைபெற்ற நிவித்திகலை பிரதேச சபையின் முதல் அமர்வின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் அஜித் நாவலகே அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கிடையில், நேற்று முன் தினம் நடைபெற்ற சபையின் தொடக்க அமர்வின் போது ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் கபில நகந்தல, அம்பகமுவ பிரதேச சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டு உள்ளூராட்சி மன்றங்களிலும் நடைபெற்ற தேர்தல்களின் போது பெரும் பான்மை வாக்குகளைப் பெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2025 உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்கண்ட இரண்டு உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மை இடங்களைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் கட்டணத்தை குறைக்க முடிவு!

கொழும்பு, ஜூன் 27
பேருந்து கட்டணத்தை 2.5 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள், பேருந்து சங்கங்களுக்கு இடையில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூலை 01ஆம் திகதியிலிருந்து குறைக்கப்பட்ட பேருந்து கட்டணத்தை நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது என்றும் முதலாம், இரண்டாம் கட்டங்களுக்கான பேருந்து கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படாது எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், பேருந்து கட்டணத்தை குறைக்கும் முடிவுக்கு பேருந்து சங்கங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (ஐ)

# நாட்டில் குழந்தைகள் இடையே தொற்றா நோய்கள் அதிகரிப்பு!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 27
நாட்டில் குழந்தைகள் இடையே தொற்றா நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு உட்கொள்ளும் முறைமையே இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சின் ஊட்டச்சத்து பிரிவின் பணிப்பாளர் சமூக மருத்துவ நிபுணர் மோனிகா விஜேரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றா நோய்கள் குழந்தைகளிடையே பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் 5 பெண்களில் ஒருவர் வீட்டு வன்முறைக்கு உள்ளாகி வருவதாக தெரியவந்துள்ளது.

குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக சுகாதார நிபுணர் தினுஷா பெரேரா, சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே இதனைத் தெரிவித்தார். (அ)

# சூரிய மின்சக்தி மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மனு!

கொழும்பு, ஜூன் 27
சூரிய மின் சக்தி கட்டமைப்புகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு செலுத்தப்படும் கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை எதிர்த்து, சூரிய மின் சக்தி உற்பத்தியாளர்கள் குழுவினால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மேல் நீதிமன்ற நீதிபதி கே. பிரியந்த பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றில் ஆஜரான மனுதாரர்கள் கூறிய தாவது,

ஜூலை மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார நிறுவனம் ஆகியவை செலுத்தும் கட்டணத்தை அமைச்சரவை தன்னிச்சையாக குறைத்துள்ளது.

மின்சாரச் சட்டத்தின் கீழ், இவ்வாறான கட்டண மாற்றங்களுக்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஒப்புதல் அவசியம்.

ஆனால், மின்சார கட்டண மாற்றம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் இருந்து எந்த ஒப்புதலும் பெறப்படவில்லை.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார கட்டணத்தை குறைக்கவேண்டாம் என அறிவுறுத்தியிருந்த போதிலும், அரசாங்கம் அதைப் புறக்கணித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மின்சாரக் கட்டண குறைப்பு நடைமுறைக்கு வருவது சட்டவிரோதமானது.

எனவே சூரிய மின்சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்துக்கான கட்டணத்தை திருத்தியமைக்க அமைச்சரவை எடுத்துள்ள முடிவை இரத்து செய்யுமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இதனை கருத்தில் கொண்ட நீதவான் இந்த மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (அ)

# துமிந்த திஸாநாயக்க தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு, ஜூன் 27
முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கின் மூன்றாவது சந்தேகநபரை பிணையில் விடுவிக்கவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் சிற்றி குடியிருப்பு வளாகத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் பயணப் பையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த மே மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த இந்த தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி மே மாதம் 20ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது, மேலும் இது தொடர்பாக இரண்டு பெண்களும் ஆணொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது வெளியான தகவல்களுக்கு அமைய, முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டார்.

பின்னர், முன்னாள் அமைச்சரை கல்கிஸை பதில் நீதவான் முன்னிலையில் கடந்த 19ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 27
2025ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு நேற்று வியாழக்கிழமை முதல் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic இற்குப் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

ஜூலை 21ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

மேலும், 2025ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சை இந்த ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசெம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை தேயிலைக்கு குறையாத மவுசு

கொழும்பு, ஜூன் 27
இந்த ஆண்டு மே மாதத்தில் 21.87 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதாக போரப்ஸ் அண்ட் வாக்கர் டீ புரோக்கர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 2.4 மில்லியன் அதிகரிப்பாகும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, மே மாதத்தில் 19.45 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

மேலும், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்க ளில் 103.38 மில்லியன் கிலோகி ரோம் தேயிலை, ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# ஈரானிய தூதுவருடன் விஜித ஹேரத் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 27
இலங்கைக்கான ஈரானிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் விஜித் ஹேரத் தனது எக்ஸ் கணக்கில் பதவிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளின் முக்கியத்துவத்தை அமைச்சர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

எந்தவொரு தீவிரப் போராட்டமும் இலங்கை உட்பட பிராந்தியத்துக்கும் அதற்கு அப்பாலும் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஈரானில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தூதருக்கு விளக்கியதாகவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்த முயன்ற நபர் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 27
சட்டவிரோதமான முறையில் பீடி இலைகளை நாட்டினுள் கடத்த முற்பட்ட சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல்மாகாண வடக்கு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

கல்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இரண்டு சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது 20 பீடி இலைக்கட்டுக்கள் அடங்கிய 600 கிலோகிராம் பீடி இலைகளுடனேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் 433 கிலோகிராம் பீடி இலைகள் அடங்கிய 14 கட்டு பீடி இலைகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபர் 27 வயதுடைய கல்பிட்டி பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார்மீது கத்திக்குத்து 2 பெண் உட்பட மூவர் கைது!

## மட்டக்களப்பில் பரபரப்பு சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 27

**பொலிஸார் இருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் இரு பெண்கள் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.**

மட்டக்களப்பு சின்ன ஊறணி (வண்ணியில்) பகுதியில் தொலைக்காட்சி பெட்டியைத் திருடிய நபரை கைது செய்ய சென்ற பொலிஸார் மீது பெண்கள் உட்பட 6 பேர் கொண்ட குழுவினர் கத்தியால் குத்தியும் பொல்லுகளால் தாக்கியும் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இரு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த இரு பெண்கள் ஒரு ஆண் உட்பட 3 பேரை கைது செய்துள்ளதாகவும் 3 பேர் தப்பியோடியுள்ளதாக மட்டக்களப்பு தலைமை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவு பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தொலைக்காட்சி பெட்டி ஒன்றை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய வன்னி என அழைக்கப்படும் சின்ன ஊறணி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் வீட்டில் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவதினமான புதன்கிழமை பிற்பகல் 01. 30 மணியளவில் இரண்டு பொலிஸார் சிவில் உடையில் அங்கு சென்று கைது செய்ய முற்பட்டனர்.

இதன்போது பொலிஸார் மீது கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட நிலையில் அங்கிருந்த இரு பெண்கள் உட்பட குழுவினர் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டதில் இரு பொலிஸாரும் பலத்த காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மீது தாக்குதலை நடத்திய சந்தேக நபரின் தாய், மனைவி ஆகிய இரு பெண்கள், ஆண் ஒருவர் உட்பட 3 பேரை கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பெருங் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை பிரதேச சபை அ.இ.மக்கள் காங்கிரஸ் வசம்



சம்மாந்துறை, ஜூன் 27

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இப்றா லெப்பை முகம்மட் மாஹீரும் உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் வெள்ளையன் வினோகாந்தும் தெரிவாகினர்.

புதிய தவிசாளர் மற்றும் உப தவிசாளர் பதவிக்குத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தவிசாளரை தெரிவு செய்வதற்கான பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 23 உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்தில் சமுகமளித்திருந்தனர்.

இதன்போது சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளரை சபையின் 23 உறுப்பினர்களில் தமிழ் அரசுக் கட்சி -01, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் -09, சுயேச்சைக் குழு உறுப்பினர்கள்-02, ஐக்கிய மக்கள் சக்தி -02 உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பிரதிநிதிகள் ஆதரித்தனர். இந்த நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஐ. எல். எம். மாஹிர் புதிய தவிசாளராக தெரிவானார்.

(எ-01)



# நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

திருகோணமலை, ஜூன் 27

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிட் பைன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு நேற்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் சுற்றுலாத்துறை, மீன்பிடி மற்றும் எரிசக்தி துறைகள் குறித்து தூதுவரும் ஆளுநரும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர்.

இதன்போது கிழக்கு ஆளுநரால் உயர்ஸ்தானிகருக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன.

(எ)

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மட்டக்களப்பில் விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஜூன் 27

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை 2024ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 80 பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை மீளாய்வு செய்து அதற்கான தரங்களை இட்டிருந்தது.

அந்த வகையில் மண்முனை தென் எருவில்பற்று, போரதீவுப்பற்று, மண்முனைப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து பங்கேற்றிருந்த பாடசாலைகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி அஜந்தா தவசீலனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுணர் கமல்ராஜ்ஜினால் பாடசாலைகளில் இடம்பெறுகின்ற உளநலம் சார் பிரச்னைகளும், சவால்களும் மற்றும் அவற்றை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அத்தோடு மாவட்ட உத்தியோகத்தர்களால் கலந்து கொண்டோருக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான மேலதிக விளக்கங்களும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

மேலும், எதிர்காலத்தில் பாடசாலைகளுடன் நெருக்கமாக செயல்பட்டு, பிள்ளைகள் தொடர்பான பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் இணைந்து, பாடசாலைகள் செயல்படவேண்டும் என்ற கோரிக்கை பிரதேச செயலாளரால் முன்வைக்கப்பட்டதுடன், கலந்து கொண்ட பாடசாலைகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(எ-08)

# ஓட்டோ மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 27

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் மெதடிஸ் தேவாலயத்துக்கு அருகிலுள்ள பாதசாரி கடவையை கடக்க முற்பட்டபோது ஓட்டோ மோதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை களுவங்கேணியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 23 ஆம் திகதி திகதி காலை 10. 00 மணியளவில் திருகோணமலை வீதியில் உள்ள மெதடிஸ் தேவாலயத்துக்கு அருகிலுள்ள பாதசாரி கடவையில் துவிச்சக்கரவண்டியுடன் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த ஓட்டோவில் மோதியதையடுத்து படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்து ஓட்டோ சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ஓட்டோ சாரதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி புதன்கிழமை அதிகாலை உயிரிழந்தார். (எ)




# மரநடுகையும் சிரமதானமும்

ஒலுவில், ஜூன் 27

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டின் நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் ஒலுவில் - பாலமுனை சமுர்த்தி வங்கியுடன் இணைந்து கட்டுப்பாட்டுச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகையும் சிரமதான நிகழ்வும் நேற்றுக் காலை சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ. சி. அப்கர், வங்கி முகாமையாளர் ரீ. கே. றஹ்மத்துல்லா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(எ)



# சிறார்களுக்கு சான்றிதழ்

சாய்ந்தமருது, ஜூன் 27


அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும் அம்பாறை மாவட்ட செயலக சமுர்த்திப் பிரிவும் இணைந்து நடத்திய சமூர்த்தி சிறுவர் கழகங்களுக்கு இடையிலான சிறுவர் கலாசார முகாமில் பங்கேற்ற சிறார்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிர்லியன்ட் பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் ஏ.சீ. ஷாமிலா பானு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக் கலந்து கொண்டார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ பலத்தை அதிகரிக்க நேட்டோ நாடுகள் புதிய திட்டம்



தி ஹேக், ஜூன் 27

**இராணுவ பலத்தை அதிகரிக்க நேட்டோ நாடுகள் புதிய திட்டம் வகுத்துள்ளன.**

இது தொடர்பில் நேட்டோ அமைப்பின் வருடாந்த மாநாட்டில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.


அமெரிக்கா உள்ளிட்ட 32 நாடுகள் இணைந்த நேட்டோ அமைப்பின் வருடாந்திர மாநாடு நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் நடைபெற்றது. இதில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

உலக அளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த மாநாட்டில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. முக்கியமாக, நேட்டோ நாடுகளின் இராணுவ பலத்தை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, உறுப்பு நாடுகள் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி. டி. பி.) 5 சதவீதத்தை இராணுவத்துக்கு செலவிட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

முடிவில் இந்த பரிந்துரைக்கு உறுப்பு நாடுகள் ஒப்புதல் தெரிவித்தன. பின்னர் இது தொடர்பில் மாநாட்டு முடிவில் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், "இராணுவ தேவைகள் மற்றும் பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த செலவினங்களுக்காக 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை ஆண்டுதோறும் செலவிடுவதற்கு உறுப்பு நாடுகள் உறுதிபூண்டுள்ளன" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சிறுபிள்ளைகள் போன்று நடந்த இஸ்ரேல் - ஈரான்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



தி ஹேக், ஜூன் 27

இஸ்ரேலும் ஈரானும் சிறுபிள்ளைகள் போன்று நடந்து கொண்டதால் வலுவான மொழியைப் பயன்படுத்தினேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

நெதர்லாந்தின் தி ஹாக்கில் நடந்த நேட்டோ உச்சி மாநாட்டுக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "இஸ்ரேலும் ஈரானும் ஒரு பாடசாலையில் இரண்டு குழந்தைகளைப் போல நடந்துகொண்டனர். அவர்களுக்குள் ஒரு பெரிய சண்டை நடந்தது. அவர்கள் நரகத்தைப் போல சண்டையிட்டார்கள். நீங்கள் அவர்களை உடனே தடுக்க முடியாது. அவர்கள் சுமார் இரண்டு, மூன்று நிமிடங்கள் சண்டையிட வைத்து, பின்னர் அவர்களைத் தடுப்பது எளிது" என்று கிண்டலாக பேசினார்.

அப்போது நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டே குறுக்கிட்டு, "அப்பா என்பவர் சில நேரங்களில் வலுவான மொழியைப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார். இதற்கு பதிலளித்த ட்ரம்ப், "சில சமயங்களில் குழந்தைகளை சரியான பாதையில் கொண்டுவர நீங்கள் வலுவான மொழியைப் பயன்படுத்த வேண்டும். அப்போது ஒரு குறிப்பிட்ட வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார். (எ)

# ரொக்கெட் கழிவுகளால் எலான் மஸ்கிற்கு சிக்கல்

## வழக்கு தொடர மெக்சிக்கோ அரசு முடிவு

மெக்சிக்கோ சிற்றி, ஜூன் 27

ஸ்பேஸ்எக்ஸ் ரொக்கெட் கழிவுகளால் எலான் மஸ்கிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உலக பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க், செவ்வாய்க் கோளில் மனிதர்களை குடியேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக, அவருடைய ஸ்பேஸ்எக்ஸ் என்ற வர்த்தக விண்கல நிறுவனத்தின் உதவியுடன் ஆளில்லா விண்கலங்களை விண்ணுக்கு ஏவி சோதனை செய்து வருகிறார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஸ்டார்பேஸ் ஏவுதளத்திலிருந்து, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் 403 அடி உயரம் கொண்ட ஸ்டார்ஷிப் விண்கலம் கடந்த மே மாத இறுதியில் ஏவப்பட்டது. எனினும், விண்ணில் ஏவப்பட்ட 30 நிமிடங்களில் அந்த விண்கலம் வெடித்து சிதறியது.

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ எல்லையருகே இந்த விண்கலம் வெடித்து விழுந்தது. இதில், மெக்சிக்கோவின் தமவுலிபாஸ் மாகாணத்திலும் அதன் பாகங்கள் விழுந்தன.

இந்தச் சூழலில், மெக்சிக்கோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம், இதற்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்க முடிவு செய்துள்ளார். இதுபற்றி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஷீன்பாம், உண்மையில் குப்பைகள் சேர்ந்துள்ளன. தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு ஏற்ப, எந்த வகையிலான சர்வதேச சட்ட விதிகள் மீறப்பட்டுள்ளன என பரிசீலனை செய்யப்படும்- என்றார்.

ரொக்கெட் கழிவுகளால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றி ஒரு விரிவான மறுஆய்வு செய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (எ)

# அமெரிக்க தாக்குதலில் அணுசக்தி மையங்கள் மிக மோசமாக பாதிப்பு

## இழப்பீடு கோருகிறது ஈரான்



தெஹ்ரான், ஜூன் 27

அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தங்கள் நாட்டின் அணுசக்தி மையங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதற்கு உரிய இழப்பீட்டை அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும், இல்லையென்றால் ஐ.நாவில் முறைப்பாடு செய்யப்படும் என்றும் ஈரான் கூறியுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் தாக்குதலில் இறங்கின. அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலில் ஈரானின் முக்கிய அணுசக்தி மையங்களான போர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்டவை தாக்கப்பட்டன. இதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதி செய்திருந்தார்.

இந்த நிலையில் ஈரானின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகி தெரிவிக்கையில், அமெரிக்கத் தாக்குதலில் எங்கள் தேசத்தின் முக்கிய அணுசக்தி மையங்கள் மோசமாக சேதமடைந்துள்ளன.

எனவே, அணுசக்தி மையங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு அமெரிக்கா இழப்பீடு வழங்க வேண்டும். போர் நிறுத்தம் தொடர்பில் எழுத்துபூர்வமான ஒப்பந்தம் எதுவும் இஸ்ரேல் உடன் மேற்கொள்ளப்படவில்லை. ,ஸ்ரேல் தாக்குதலை நிறுத்தியுள்ளது. அவ்வளவுதான் - என்றார். (எ)

## அணுகுண்டுகளை சுமக்கும் திறன் கொண்ட

# எவ் - 35 ஜெட் விமானங்களை வாங்க இங்கிலாந்து திட்டம்

லண்டன், ஜூன் 27

அணுகுண்டுகளை சுமக்கும் திறன் கொண்ட எவ் - 35 ஜெட் விமானங்களை வாங்குவதற்கு இங்கிலாந்து அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இங்கிலாந்து அரசின் முடிவுக்கு நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

அணு குண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட எவ் - 35 ஜெட் விமானங்களை வாங்க இங்கிலாந்து அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் நேட்டோவின் பகிரப்பட்ட வான்வழி அணுசக்தி இயக்கத்தில் இங்கிலாந்து இணையும் என்றும் அந்த நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

இதன்படி மொத்தம் 12 விமானங்களை வாங்க இங்கிலாந்து அரசு திட்டமிட்டுள்ளது. அணுசக்தி ஆற்றல் விவகாரத்தில் ,து ஒரு வலிமையான நிலைப்பாடு என்று ,ங்கிலாந்து அரசு கூறியுள்ளது. நெதர்லாந்தில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொண்டபோது இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (எ)

# இந்தியா-பாக். போரை நிறுத்தியது நான்தான்

## 18ஆவது முறையாக பெருமை பேசிய ட்ரம்ப்

தி ஹேக், ஜூன் 27

இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியது நான் தான் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறுவது இது 18ஆவது முறையாகும்.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் அறிவிப்பை ட்ரம்ப் வெளியிட்டதில் இருந்தே, இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களை முன் வைத்து வருகின்றன. இந்த நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த விவகாரத்தில் அமெரிக்க நாடு எந்தப் பங்கும் வகிக்கவில்லை என ட்ரம்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தொலைபேசி உரையாடலில் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால் அதன் பின்னரும் கூட இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியது நான் தான் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் 247 ஓட்டங்கள் பங்களாதேஷ் அணி தடுமாற்றம்

## இலங்கை அணி சிறப்பான ஆரம்பம்



கொழும்பு, ஜூன் 27

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

அஷித பெர்னாண்டோ, அறிமுக வீரர் சோனல் தினூஷ ஆகிய இருவரும் பங்களாதேஷின் கடைசி இரண்டு விக்கெட்களை நேற்றுக் காலை வீழ்த்தினர்.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று வியாழக்கிழமை காலை தனது முதல் இன்னிங்ஸை 8 விக்கெட்கள் இழப்புக்கு 220 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த பங்களாதேஷ் அணி, கடைசி இரண்டு விக்கெட்களை 27 மேலதிக ஓட்டங்களுக்கு இழந்தது.

தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தய்ஜுல் இஸ்லாம் 33 ஓட்டங்களைப் பெற்று கடைசியாக ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்கள் பெற்றுள்ள இலங்கை அணி சிறப்பான ஆரம்பத்தை பெற்றுள்ளது. பதும் நிஸ்ஸங்க 42 ஓட்டங்களுடனும் லஹிரு உதார 40 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வருகின்றனர். (எ)

# 180 ஓட்டங்களுக்குள் சுருண்ட ஆஸி.அணி



பார்படாஸ், ஜூன் 27

மேற்கு இந்திய தீவுகளின் அபார பந்துவீச்சில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 180 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி பார்படாஸில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள், மேற்கு இந்திய தீவுகளின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய அணியில் சாம் கான்ஸ்டாஸ் (3), கேமரூன் கிரீன் (3), ஜோஷ் இங்லிஸ் (5) வரிசையாக வீழ்ந்தனர்.

இந்த இக்கட்டான சூழலிலிருந்து அணியை மீட்டெடுக்க உஸ்மான் கவாஜா - டிராவிஸ் ஹெட் ஜோடி போராடியது. சிறப் பாக விளையாடிய இந்த ஜோடி 89 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் பிரிந்தது. உஸ்மான் கவாஜா 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறு முனையில் அரைச்சதம் கடந்த டிராவிஸ் ஹெட் 59 ஓட்டங்களில் வெளி யேறினார்.

இவர்கள் ஆட்டமிழந்ததும் அவுஸ் திரேலிய அணி மீண்டும் சரிவுக்குள் ளானது. பின்வரிசையில் பட் கம்மின்ஸ் (28 ஓட்டங்கள்) தவிர மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்ட மிழந்தனர். முடிவில் 56.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. அபார மாக பந்துவீசிய மேற்கு இந்திய தீவு கள் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 5 விக் கெட்களும், ஷமர் ஜோசப் 4 விக்கெட் களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியும் தடுமாற் றத்துடனே தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான கிரெய்க் பிராத்வெயிட் 4 ஓட்டங்களிலும், ஜான் கம்பெல் 7 ஓட் டங்களிலும் ஸ்டார்க் பந்துவீச்சில் வெளி யேறினர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த கீசி கார்டி 20 ஓட் டங்களில் கம்மின்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஜோமல் வாரிக்கன் முதல் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கு இந்திய தீவுகள் அணி 4 விக்கெட்களை இழந்து 57 ஓட்டங்கள் எடுத்தது. பிரண்டன் கிங் 23 ஓட்டங்களுடனும் ரோஸ்டன் சேஸ் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (எ)

# 3 போட்டிகளுக்கு மேல் பும்ரா விளையாடுவாரா?

லீட்ஸ், ஜூன் 27

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா கூடுதல் போட்டிகளில் விளையாடுவாரா? என்று இந்திய தலைமை பயிற்சியாளரான கௌதம் கம்பீரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கம்பீர், “இல்லை, எங்கள் திட்டங்கள் அப்படியே உள்ளன. பும்ராவின் பணிச்சுமையை நிர்வகிப்பது மிக முக்கியம். ஏனென்றால் எங்களுக்கு நிறைய தொடர்கள் வரவுள்ளன. இந்த சுற்றுப்பயணம் தொடங்குவதற்கு முன்பு, அவர் 3 டெஸ்ட் போட்டிக ளில் விளையாடுவார் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், எந்த 3 என்று நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை.

நாங்கள் எங்களது பந்துவீச்சு குழுவை முழுமையாக நம்புகிறோம். நம்பிக்கையின் அடிப்படையில் அல்ல, திறமையின் அடிப்படையில் அவர்களைத் தெரிவு செய்வோம்”- என்றார். (எ)



# இந்திய அணியிலிருந்து ஹர்ஷித் ராணா நீக்கம்



பர்மிங்காம், ஜூன் 27

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹர்ஷித் ராணா நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்த நிலையில் 2ஆவது போட்டிக்கான இந்திய அணியிலிருந்து இளம் வேகப்பந்து வீச்சாளரான ஹர்ஷித் ராணா நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பர்மிங்காம் சென்ற இந்திய அணியுடன் அவர் பயணிக்கவில்லை. இதனால் அவர் அணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இளம் வேகப்பந்து வீச்சாளரான ஹர்ஷித் ராணா முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடுதல் வீரராக சேர்க்கப்பட்டிருந்தார். ஆனால், விளையாடிய அணியில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியல் வெளியீடு

டுபாய், ஜூன் 27

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தத் தொடர் 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கு (2025 - 2027) உட்பட்டது.

முதலாவது போட்டி நிறைவடைந்ததை அடுத்து 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கான புள்ளிப் பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இந்தியாவை வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கியுள்ள இங்கிலாந்து 100 சதவீத புள்ளியுடன் முதலிடத்தில் உள்ளது.

2ஆவது மற்றும் 3ஆவது இடங்களில் முறையே தலா 33. 33 சதவீத புள்ளிகளுடன் பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் உள்ளன. தோல்வி கண்ட இந்தியா இன்னும் புள்ளிக்கணக்கை தொடங்காமல் 4ஆவது இடத்தில் உள்ளது. (எ)

# சாய் சுதர்சனுக்கு காயம்

பர்மிங்காம், ஜூன் 27

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லீட்ஸில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இரண்டாவது போட்டியில் தமிழக வீரரான சாய் சுதர்சன் களமிறங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் சாய் சுதர்சனுக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. காயம் இன்னும் முழுமையாக குணமடையவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அவர் 2ஆவது போட்டியில் களமிறங்குவாரா? என்பது உறுதியாக தெரியவில்லை.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சாய் சுதர்சன் 0 (முதல் இன்னிங்ஸ்), 30 ஓட்டங்கள் (2ஆவது இன்னிங்ஸ்) மட்டுமே அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியா மோசமான சாதனை

லீட்ஸ், ஜூன் 27

148 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் இந்திய அணி மோசமான சாதனை படைத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லீட்ஸில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் இந்தியா தரப்பில் 5 சதங்கள் அடிக்கப்பட்டன. முதல் இன்னிங்ஸில் ஜெய்ஸ்வால், சுப்மன் கில் மற்றும் ரிஷப் பண்ட் சதமடித்து அசத்தினர். இதேபோல் 2ஆவது இன்னிங்ஸில் கே.எல்.ராகுல் மற்றும் ரிஷப் பண்ட் சதமடித்தனர். இருப்பினும் இந்திய அணி தோல்வியை சந்தித்துள்ளது.

இதன் மூலம் 148 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியில் 5 சதங்கள் அடித்தும் தோல்வியைத் தழுவிய முதல் அணி என்ற மோசமான சாதனையை இந்தியா படைத்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலுக்குச்...

சென்ற அந்தப் பகுதி மீனவர்கள் அவர் சென்ற கட்டுமரம் கடலில் மிதந்து வந்ததை கண்டு மீட்டுள்ளனர். ஏதேனும் படகு கட்டுமரத்தை மோதியிருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டதுடன், அவரை தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## யாழ்.-கொழும்பு...

கல்கிசை புகையிரத நிலையத்தில் இருந்து அதிகாலை 5.15 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் கடுகதி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து காலை 5. 45 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை முற்பகல் 11.49 வந்தடையும். நண்பகல் 12.13 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

மீண்டும் மதியம் 1.50 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கும் கடுகதி ரயில் பிற்பகல் 2.12 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டையை இரவு 8.33 சென்றடையும். கல்கிசையை இரவு 8.55 மணிக்கு சென்றடையும் - என்றார்.

இதேசமயம், குறித்த கடுகதி புகையிரத சேவைக்கான ஆசன முற்பதிவுகளை அடுத்த ஒருசில தினங்களில் மேற்கொள்ள முடியும். புகையிரத திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் ஊடாக முன்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இதேவேளை, இதுவரை காலை 5.45 மணிக்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்படும் யாழ்தேவி ரயில் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் காலை 6.35 மணிக்கு சேவையை ஆரம்பிக்கும் என்றும் கூறினார். (ஐ)

## கிணற்றில்...

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் தக்ஷன் (வயது 10) என்பவரே உயிரிழந்தார்.

தனது பாட்டனுடன் சிறுவன் தோட்டத்துக்கு சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாட்டன் தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தபோது கிணற்றிலிருந்த மீன்களை பிடிப்பதற்கு சிறுவன் முயன்றுள்ளார். இதற்காக அவர் வாளியை கிணற்றில் விட்டபோது வாளியின் கயிறு காலில் சிக்கியதில் சிறுவன் கிணற்றுள் விழுந்துள்ளார்.

சிறுவனின் சடலம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கரைதுறைப்பற்று...

நடைபெற்றது.

பகிரங்க வாக்கெடுப்பாக தவிசாளர், உப தவிசாளர் பதவிகளுக்கு தெரிவுகள் நடந்தன. தவிசாளர் பதவிக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் சின்னராசா லோகேஸ்வரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தொம்மைப்பிள்ளை பவுல்ராஜ், தேசிய மக்கள் சக்தியின் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.

21 உறுப்பினர்கள் கொண்ட சபையில் தமிழ் அரசு கட்சிக்கு 11 வாக்குகளும் பவுல்ராஜ், இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோருக்கு தலா 5 வாக்குகளும் கிடைத்தன.

உபதவிசாளர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் யோகேஸ்வரன் அனோஜன், சுயேச்சை உறுப்பினர் வல்லிபுரம் வசந்தரசா ஆகியோர் போட்டியிட்டனர்.

அனோஜன் 9 வாக்குகளையும் வசந்தராசா 6 வாக்குகளையும் பெற்றனர் 6 பேர் நடுநிலைமை வகித்தனர். இதன் அடிப்படையில் யோ. அனோஜன் உபதவிசாளராக தெரிவானார். (ஐ)

## 40ஆயிரம்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்ப சோளம் உற்பத்தி, ரின் மீன், முட்டை, இறைச்சி, உப்பு இறக்குமதி தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உணவு கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கூடியபோதே இந்த முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## நல்லிணக்க...

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையா ளர் வோல்கர் டர்க் உறுதியளித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்து பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். இந்த சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் புதிய அரசியல் மற்றும் சமூக மாற்றத்தைப் பாராட்டிய ஆணையாளர், வடக்கு, தெற்கில் உள்ள அனைத்து மக்களும் தற்போதைய ஜனாதிபதி - அரசாங்கத்தின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

தனது இந்தப் பயணத்தில், இலங்கையில் நடைபெற்று வரும் புதிய மாற்றம் குறித்துத் தெளிவான புரிதலைப் பெற முடிந்ததாக தெரிவித்த வோல்கர் டர்க், இன்று நாட்டின் அனைத்து மக்களும் சிறந்த எதிர்காலத்துக்கான புதிய நம்பிக்கைகளை கொண்டுள்ளனர் என்று தான் நம்புகிறார் என்றும் கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்னை குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வடக்கு, தெற்கில் காணாமல் போனவர்களின் உறவினர்களின் வேதனைகள் ஒரே மாதிரியானவை. அவர்கள் அரசாங்கத்தின்மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் நிறைவேறும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை எதிர்பார்க்கிறது - என்றும் வோல்கர் டர்க் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில் தற்போதைய அரசியல் கலாசாரம் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புகள் - அவர்களின் உரிமைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயல்படத் தவறியுள்ளன. இதனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தி மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்னையை அனுபவ ரீதியாக எதிர்கொண்ட ஓர் அரசியல் இயக்கமாக தனக்கு அது தொடர்பான புரிதல் இருக்கிறது - என்றார்.

அத்துடன், நாட்டில் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாக்க தேவையான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கும் அரசாங் கம் உறுதிபூண்டுள்ளது. நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதே தற்போதைய நிலைமை யில் அரசாங்கத்தின் பிரதான நோக்கம். சவால்களை நன்கு புரிந்துகொண்டு அந்த நோக்கத்துக்காக உறுதிபூண்டுள்ள தாகவும், சர்வதேச அளவில் அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

மேலும், இலங்கையின் இந்த உண்மையான நிலைமையை உலகுக்கு கொண்டு செல்வதன் மூலம் சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆதரவு அவசியம் என்றும் ஜனாதிபதி இதன்போது கூறினார். (ஐ)

# பாத யாத்திரை குழுவினர் கதிர்காமத்தை அடைந்தனர்



கதிர்காமம், ஜூன் 27

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் திலிருந்து ஆரம்பித்த பாதயாத்திரை நேற்று காலை கதிர்காமம் முருகன் ஆலயத்தை சென்றடைந்தது.

கடந்த மே முதலாம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பாத யாத்திரை ஆரம்பமானது. இந்தப் பாத யாத்திரை கடந்த ஜூன் 19ஆம் திகதி உகந்தைமலை முருகன் ஆலயத்தை சென்றடைந்தது.

கடந்த 20ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப் பட்டதைத் தொடர்ந்து 5 நாட்கள் பயணித்த பாத யாத்திரை குழு நேற்று வியாழக்கிழமை காலை கதிர்காமத்தை அடைந்தது.

இதைத் தொடர்ந்து யாத்திரை குழுவினர் கதிர்காமம் முருகன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற கொடியேற்றத் திருவிழாவில் பங்கேற்றனர். நேற்று ஆரம்பித்த கதிர்காமம் ஆலய திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி நிறைவுறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அர்ச்சுனாவின் எம். பி. பதவி குறித்த வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் பதவி தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பதவியை இரத்து செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்றைய தினம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போதே, வழக்கை ஜூலை 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## நீரில்...

மரக்காலைக்கு செல்வதாக தாயிடம் கூறிவிட்டு தெல்லிப்பழையிலுள்ள வீட்டுக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் மகனை காணாத நிலையில் பெற்றோர் அவரை தேடி தெல்லிப்பழையிலுள்ள வீட்டுக்கு சென்றுள்ளனர்.

அங்கு தண்ணீர் நிறைந்த தொட்டியில் உயிரிழந்த நிலையில் மகனை கண்டனர். அவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் உடல் கூராய்வுக்காக ஒப்படைக்கப்பட்டது. இதன்போதே, அவர் வலிப்பு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்பது தெரிய வந்தது.

இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## குழந்தை...

அறிவித்தபடி அகழ்வு பணிகள் நேற்று ஆரம்பமாகின. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிவான் முன்னிலையில் இந்த அகழ்வு பணிகள் நடைபெற்றன.

முன்னர் நடத்தப்பட்ட அகழ்வில் 3 குழந்தைகளின் எலும்பு எச்சங்கள் உட்பட 19 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. இந்த நிலையில், நேற்றைய தினம் குழந்தை ஒன்றின் உட்பட மூன்று மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு பணிகள் தொடர்ந்து 15 தினங்களுக்கு முன்னெடுக்கப்படும். அதன் பின்னர், சிறிய இடைவெளியின் பின்னர் அகழ்வு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அகழ்வு பணியை 45 நாட்களுக்கு முன்னெடுப்பதற்கு போதுமான நிதி ஒதுக்கீடு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உள்நாட்டு...

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்யவும் வலியுறுத்தினேன்.

அத்துடன், "பயங்கரவாத தடை சட்டம், ஒன்லைன் பாதுகாப்பு சட்டம் என்பவற்றை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். மேலும், பாதுகாப்பு, பொலிஸ் துறைகளில் சீர்திருத்தங்களின் அவசியத்தையும் குறிப்பிட்டேன்.

"ஒரே பாலின திருமணத்தை குற்ற மற்றதாக்க முன்மொழியும் தற்போதைய பிரேரணை மிக விரைவில் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன். ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மீண்டும் தொடங்குவது ஒரு நேர்மறையான நடவடிக்கையாக அமையும்" என்றும் கூறினார். (ஐ)

## நயினை...

விநாயக பெருமான், முருகன் - வள்ளி - தெய்வானை ஆகியோருக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று அம்பாள் பரிவார தெய்வங்களுடன் கொடித்தம்பம் அருகே வீற்றிருக்க கொடியேற்றம் நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் மறுநாள், வெள்ளிக்கிழமை பிரசித்தி பெற்ற தெப்போற்சவம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 2இல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# வத்திக்கான் பிரதிநிதி இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, ஜூன் 27

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தன்மை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வத்திக்கான் வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை வருகை தரவுள்ளார்.**

எதிர்வரும் ஒகஸ்ட் அல்லது செம்ரெம்பர் மாதம் அவர் இலங்கை வருவார் என்று பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருத்து வெளியிடும்போது நான் வத்திக்கானில் இருந்தேன். வத்திக்கானில் பாப்பரசருக்கு அடுத்த நிலையில் உள்ளவரை சந்திப்பதற்காகவே நான் சென்றிருந்தேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விரிவாக பேசப்பட்டது.

பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை நாம் கோரினோம்." -எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விவாதம் கோரவுள்ளோம்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பேராயர் வெளியிட்ட கருத்து நீதியானது. ஏனெனில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் எந்தவொரு பரிந்துரையும் இந்த ஆட்சியின்கீழ் அமுலாகவில்லை. வத்திக்கானில் நடைபெற்ற சந்திப்புகளின்போதும் இந்த விடயத்தை சுட்டிக்காட்டி இருந்தேன்.

வத்திக்கானின் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் ஒகஸ்ட் அல்லது செப்ரெம்பரில் வரவுள்ளார். மேற்படி பிரச்னைகள் தொடர்பில் அவதானம் செலுத்தவே அவர் வருகின்றார்." - என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன மேலும் கூறினார்.

(அ)

## கெஹலிய உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரிகை!

கொழும்பு, ஜூன் 27

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். தொடர்புடைய குற்றப்பத்திரிகையில் 13 குற்றச்சாட்டுகள் உள்ளன.

2022 ஆம் ஆண்டில், நாட்டில் பொருளாதார நெருக்கடி என்ற போர்வையில், சுகாதாரத் துறையின் ஏற்கனவே இருந்த கொள்முதல் நடைமுறைகளை மாற்றி, மருந்துகளுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்தி புதிய மருந்துகளை கொள்வனவு செய்தது.

இவ்வாறு கொள்வனவு செய்த மருந்துகளில் தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் காணப்பட்டதோடு, அதனை செலுத்திக்கொண்ட கண்டி, மாத்தளை மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் மூவர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாகக் கிடைத்த இரண்டு முறைப்பாடுகளின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்தது.பின்னர், அந்த விசாரணை தொடர்பாக மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டதோடு, அதில் 12 நபர்கள் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டனர்.

தரமற்ற தடுப்பூசிகளை விநியோகித்த சுதத் ஜனக பெர்னாண்டோ, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறி சந்திர குப்தா மற்றும் சுகாதாரத்துறையில் உயர் அதிகாரிகள் குழு ஆகியோர் இதில் அடங்குவர்.

இந்த வழக்கில் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டபோதிலும், தரமற்ற தடுப்பூசிகளை விநியோகம் செய்த முதல் சந்தேக நபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கடந்த 19 ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்திற்கு இறுதியாக விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிக்கையிட்டு தெரிவிக்கையில், தரமற்ற தடுப்பூசி சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஒரு வருடம், 8 மாதங்கள் மற்றும் 6 நாட்களாக நடத்திய விசாரணைகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம தெரிவித்தார்.

## சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் நேற்று காலை கைது!



கொழும்பு, ஜூன் 27

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறி சந்திரகுப்தா நேற்றுக் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணையக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலம் அளிக்க ஆணையகத்தின் முன் முன்னிலையான பின்னர் அவர் காவலில் எடுக்கப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த வழக்கில் சந்திரகுப்தா 2023 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுடனும் தொடர்புடையது.

அவர் கைது செய்யப்பட்டதற்கான சரியான காரணம் இன்னும் இல்லை. (அ)

நுவரெலியா அஞ்சல் கட்டடம்

## ரணிலின் முடிவை இரத்து செய்த அநுர

கொழும்பு, ஜூன் 27

நுவரெலியா அஞ்சல் நிலையக் கட்டடத்தை விருந்த கமாக மாற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்த முடிவை இரத்துச் செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் நிறுவனம் ஒன்று நுவரெலியாவின் அஞ்சல் நிலையத்தைச் சுற்றி ஒரு விருந்தகத்தை நிர்மாணிக்க திட்டமிட்டிருந்தது.

ஆனால், பொதுமக்களின் எதிர்ப்புகளைத் தொடர்ந்து அந்த திட்டம் மீளப் பெறப்பட்டது.

அத்துடன், நுவரெலியா அஞ்சல் நிலையக் கட்டடத்தை நகர அபிவிருத்தி சபைக்கு மாற்றுவதற்கான முன்மொழிவையும் முன்னாள் அமைச்சரவை அங்கீகரித்திருந்தது.

இருப்பினும், அந்த நேரத்தில் அஞ்சல் துறை ஊழியர்களால் அதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தநிலையில், நுவரெலியா அஞ்சல் நிலையக் கட்டடத்தையும், அதன் வளாகத்தையும் நகர அபிவிருத்தி சபைக்கு மாற்றுவதற்கான அமைச்சரவையின் முடிவை இரத்து செய்ய, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் சமர்ப்பித்த தீர்மானத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதற்குப் பதிலாக, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கவும், புதிய வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை அதிகரிக்கவும், தற்போதுள்ள கட்டடத்தையும் அருகிலுள்ள நிலத்தையும் மேம்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது. (அ)

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வடக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு



யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினருக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மீள்குடியமர்வு-காணி விடுவிப்புத் தொடர்பான தற்போதைய நிலைமைகளை ஆணையாளர் கேட்டறிந்தார்.

இதற்கு மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படுகின்றன என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பன இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் காணிகளை சுவீகரித்துள்ளன. இதனால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் விவசாயக் காணிகள் என்பன இழக்கப்பட்டுள்ளன.

தற்போதைய அரசாங்கம் மாவட்ட ரீதியிலான குழுக்களை அமைத்து இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை ஆணையாளருக்கு தெரியப்படுத்தியதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

காணி உரித்து நிர்ணய திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பிலும் ஆணையாளரும், ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியும் விடயங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

அந்தப் பொறிமுறை சரியானது என்றும், ஆனால் மக்களுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் மாவட்டச் செயலர்கள் இதன்போது ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினர்.

மேலும், ஆணையாளர் இராணுவப் பிரசன்னம் மற்றும் மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் மேற்கொள்வது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அந்த நடவடிக்கைகள் குறைந்துள்ளன என்றும் இன்னமும் சில பிரச்சினைகள் அதில் உள்ளன எனவும் ஆணையாளருக்கு ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் ஆணையாளர் கரிசனையை வெளிப்படுத்தினார்.

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அதற்குரிய புனர்வாழ்வு நிலையம் என்பன தொடர்பிலும் ஆணையாளர் கேள்வி எழுப்பினார்.

போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் இன்னமும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவில்லை என்பதையும், விரைவில் அதை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்ற விடயத்தையும் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியதாக ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

## கொழும்புத் துறைமுகத்தில் மீண்டும் கொள்கலன் நெரிசல்

### தேங்கி கிடக்கும் உணவு பொருட்கள்

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு துறைமுகத்தில் மீண்டும் கொள்கலன் நெரிசல் உருவாகி வருவதாக கொள்கலன் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-துறைமுகத்திலிருந்து சரக்குப் பொருட்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் காரணமாக மீண்டும் வரிசை ஏற்பட்டுள்ளது.

இடப்பற்றாக்குறை, விடுவிப்பு முனைய அதிகாரிகள் மற்றும் சுங்கப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய அரச அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக சரக்குப் பொருட்கள் முறையாக விடுவிக்கப்படவில்லை.-என்றார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org